முருகப்பெருமான் துணை

**மகான் கழற்சிங்கர் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.10.2023**, வெள்ளிக்கிழமை

1. அறமாக வாழுகின்ற ஞானியே
அண்ணலே ஞான தேசிகனே
வரமாக அரங்கனுன் பெருமை கூறி
வழங்குவேன் அறிவுரை ஆசிதனை
2. ஆசிதனை சோபகிருது தரிவை திங்கள்
அறிவிக்க மூவாறோர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 19 ம் நாள், 06.10.2023, வெள்ளிக்கிழமை)
ஆசிதனை கழற்சிங்கர் நாயனாரும்
அருளுவேன் உலகநலம் காண
3. காணவே சன்மார்க்க நெறிதனை
கலியுக மக்கள் அனைவரும்
ஞானமாக ஏற்றுத் தொடர
நம்பிக்கை வைத்து அரங்கன் திருவடி
4. திருவடிப் பற்றி வருதலுற
தீட்சை ஆசிதனை அடைந்து
குருவேயென வணங்கித் தொடர
குறைவிலா ஞானபலம் அடைவர்
5. அடைவதுடன் அன்னதானமெனும்
ஆற்றல்மிக்க தருமவழிதனை
தடையற மக்கள் தானும் ஏற்று
தரும சேவை உலகமெங்கும் செய்துவர
6. வருகவே உலகம் எங்கிலுமே
வள்ளல் தன்மை பெருகி
முருகப் பெருமானை வணங்கி
முழுமை ஞானம் அடைந்து

7. அடைந்துமே கலிவாழ் மக்கள்
அரங்கன் மார்க்கம் வழிவர
தடையின்றி ஞானிகளாவர்
தரணிகாக்கும் உத்தமர்களாகி
8. ஆகியே சமூக அவலங்கள்
அனைத்தையும் மாற்றுகின்ற
மிகையான அதிகார பலம்கண்டு
மேலான சக்திதனை உருவாக்கி
9. ஆக்கியே சமூக மாற்றமுடன்
அனைத்திலும் சமநிலை கூட்டி
ஆக்கமான ஞானத் தலைமைகள்
அமைத்திடும் வண்ணம் சேவை
10. சேவை களம் கண்டுமே
செப்பிடுவேன் உலகை மாற்றும்
அவதார ஞானிகள் வெளிப்பட
அற்புதம் பல படைத்து நன்கு
11. படைத்துமே ஞான ஆட்சிதனை
பண்பான மக்கள் படையோடு
படைத்துமே உலகை ஆள்வர்
பாடிவந்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—